# <u>மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,</u>
# <u>ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், திருச்சிராப்பள்ளி</u>

## "காணாமல் போன குழந்தைகள்" தொடர்பாக வழக்குகளில் குழந்தைகளின் பெற்றோர்கள் / பாதுகாவலர்களுக்கு உதவுவதற்காக காவல் நிலையங்களில் சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் சேர்க்கை அறிவிப்பு

**அறிவிக்கை எண். 01/2026,** **தேதி:27.04.2026**

******

மாண்புமிகு உச்சநீதிமன்றம் Bachpan Bachao Andolan VS Union of India and Others, என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படியும், தமிழ்நாடு அரசின் அரசிதழ் அறிவிக்கை G.O.(Ms)No.130, Dated: 12.03.2026-இன் படியும், திருச்சிராப்பள்ளி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இயங்கி வரும் இலால்குடி, மணப்பாறை, முசிறி, துறையூர், ஸ்ரீரங்கம் மற்றும் தொட்டியம் வட்ட சட்டப்பணிகள் குழுவின் மூலம், "காணாமல் போன குழந்தைகள்" தொடர்புடைய வழக்குகளில் குழந்தைகளின் பெற்றோர்கள் / பாதுகாவலர்களுக்கு உதவுவதற்காக காவல் நிலையங்களில் பணியமர்த்தப்படவுள்ள சட்டத் தன்னார்வலர்களை (Para Legal Volunteers 40 நபர்கள்) நேர்காணல் மூலம் தேர்வு செய்வதற்காக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை சேர்ந்த பின்வரும் தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**<u>தகுதி வரம்புகள்:</u>**

| | |
|---|---|
| **கல்வித் தகுதி:** | குறைந்தபட்சம் 12-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (சமூகப் பணி, உளவியல் அல்லது தொடர்புடைய துறையில் பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்). |
| **வயது வரம்பு:** | 25 முதல் 65 வயதுக்குள் இருக்க வேண்டும். |

- சமூக சேவை புரியும் சமூக ஆர்வலர்கள்.
  (அரசியல் அமைப்பு சாராத தன்னார்வ தொண்டு நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் - NGO உறுப்பினர்கள்).
- உளவியலாளர்கள் (மனோதத்துவ நிபுணர்கள்).
- ஆசிரியர்கள் மற்றும் ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள்

விண்ணப்பத்தாரர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சார்ந்தவர்களாக மட்டும் இருக்க வேண்டும்.

சட்டத் தன்னார்வலர்கள் ஆரம்பத்தில் ஓராண்டு கால சேவைப்பணிக்காக பட்டியலிடப்படுவார்கள். அவர்களின் செயல்பாட்டின் அடிப்படையில், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் தலைவரின் பரிந்துரையின் பேரில் இக்காலம் மேலும் நீட்டிக்கப்படலாம்.

சட்டத் தன்னார்வலர்கள் (PLVs) ஒவ்வொரு வருகைக்கும் ரூ.1,000/- வீதம் மதிப்பூதியம் பெற தகுதியானவர்கள். எனினும், ஒரு வழக்கிற்கு அதிகபட்சமாக ரூ.5,000/- என்ற உச்சவரம்பிற்கு உட்பட்டே இத்தொகை வழங்கப்படும்.

"காணாமல் போன குழந்தைகள்" தொடர்புடைய வழக்குகளில் குழந்தைகளின் பெற்றோர்கள் / பாதுகாவலர்களுக்கு உதவுவதில் சட்டத் தன்னார்வலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பின்வருமாறு;

- விசாரணையின் போது உதவுதல்
- மனரீதியான ஆதரவு அளித்தல் மற்றும் தகவல்களைப் பெறுதல்
- காவல் துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்
- மீட்கப்பட்ட குழந்தைக்குப் பிந்தைய கால ஆதரவு அளித்தல்
- நலத்திட்ட உதவிகள் கிடைப்பதை எளிதாக்குதல்

மேற்கண்ட தகுதிகளின் அடிப்படையில் சட்ட தன்னார்வலர்களாக பணிபுரிய விருப்பமுள்ளவர்கள் https://tiruchirappalli.dcourts.gov.in/ என்ற திருச்சிராப்பள்ளி மாவட்ட நீதிமன்ற இணையதளத்திலிருந்து விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் 15.05.2026-ம் தேதி மாலை 05.30 மணிக்குள் **தலைவர், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, திருச்சிராப்பள்ளி– 620001** என்ற முகவரிக்கு தபால் மூலமாகவோ (அ) நேரிலோ விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேற்படி கடைசி தேதிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

நேர்காணலுக்கு தேர்வு செய்யப்படும் தகுதிவாய்ந்த நபர்கள் மற்றும் தேர்வு செய்யப்படாதவர்களின் விபரம் மற்றும் நேர்காணல் குறித்த அனைத்து அறிவிப்புகளும் https://tiruchirappalli.dcourts.gov.in/ என்ற திருச்சிராப்பள்ளி மாவட்ட நீதிமன்ற இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

**குறிப்பு:** மேற்படி பணிக்கு மதிப்பூதியம் தவிர சம்பளம், தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி ஏதும் கிடையாது. மேற்படி பணியில் இணையும் நபர்களது பணியினை தன்னார்வலர்களாக மட்டுமே கருதப்படும். நிரந்தர பணியென கருத இயலாது. மேலும் விபரங்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இயங்கிவரும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு (அ) இலால்குடி, மணப்பாறை, முசிறி, துறையூர், ஸ்ரீரங்கம் மற்றும் தொட்டியம் வட்ட சட்டப்பணிகள் குழுக்களை அணுகலாம்.

//ஒப்பம்//
(திரு.M.கிருஸ்டோபர்)
தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
திருச்சிராப்பள்ளி.

D.No : 3120/2026, Date : 28.04.2026.

**சட்ட தன்னார்வ தொண்டர்களாக பணிபுரிவதற்கான விண்ணப்பபடிவம்**
**மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, திருச்சிராப்பள்ளி**

**DLSA Notification No: 01/2026, Dated:27/04/2026**

விண்ணப்பதாரர் புகைப்படம் (சுய சான்றொப்பம் இடவும்)

| | | | |
|---|---|---|---|
| 1 | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2 | தகப்பனார் / கணவர் பெயர் | : | |
| 3 | பிறந்த தேதி மற்றும் வயது | : | |
| 4 | பாலினம் | : | ஆண் /பெண் / மூன்றாம் பாலினத்தவர் |
| 5 | கல்வி மற்றும் தொழில்நுட்பத் தகுதி (வேறு ஏதாவது சேவை அனுபவம் இருந்தால் அதன் விவரம்) | : | |
| 6 | விண்ணப்பதாரரின் மதம் மற்றும் வகுப்பு | : | |
| 7 | தொடர்பு முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி | : | |
| 8 | தற்போதைய பணி விபரம் | : | |
| 9 | விண்ணப்பத்தாரர் மீது குற்ற வழக்குகள் ஏதேனும் உள்ளதா? | : | |
| 10 | இதற்கு முன் சட்ட தன்னார்வலராக சேவை செய்திருப்பின், அதன் விபரம் | : | |
| 11 | விண்ணப்பதாரர்கள் சட்ட தன்னார்வலராக சேவை செய்ய விரும்பும் இடம் | : | திருச்சிராப்பள்ளி ☐<br>இலால்குடி, ☐<br>மணப்பாறை ☐<br>முசிறி ☐<br>துறையூர் ☐<br>ஸ்ரீரங்கம் ☐<br>தொட்டியம் ☐ |

நாள் :

இடம் : **விண்ணப்பதாரரின் கையொப்பம்**

**<u>உறுதிமொழி</u>**

மேற்கூறிய அனைத்து தகவல்களும் உண்மை என சான்றளிக்கிறேன். உரிய சான்றிதழ்களின் நகலை இணைத்துள்ளேன்.

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**